மலர் : 11 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் இதழ் : 3
தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रड विलज मिनस्ट्री

ഹണ്‍ഡ്റഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

**ஜனவரி 2011**

ஆண்டுசந்தா இந்தியா ரூ.25 வெளிநாடு ரூ. 250

# 100- கிராம ஊழியம்

**TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை**

## 2011 புத்தாண்டு வாழ்த்துக்கள்!




**TVGM - 2011 ஜனவரி**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

**முந்தின சீரைப் பார்க்கிலும்**
**உங்களுக்கு**
**நற்சீர் உண்டாகச் செய்வேன்.**

எசேக்கியேல் 36:11



திண்டிவனம் – வைராபுரம் கிராமத்தில் கட்டியுள்ள ஜெபவீட்டை சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர் 02.12.2010 அன்று தேவனுடைய மகிமைக்கென்று திறந்து வைத்தார்கள்.

**நன்றி :** **Elim Christian Centre**
Noel , Venice , Jaydene , Simmone Govender.

**பாஸ்டர் விக்கிக்காக தேவனைத் துதியுங்கள்!**

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

## *We wish you a Happy Newyear 2011*



P.T. **கிறிஸ்டோபர்**
TVGM ஸ்தாபகர்



**ஸ்டீபன் கிறிஸ்டோபர்**
மேனேஜிங் டிரஸ்டி

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே!

உங்கள் அனைவருக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் எங்கள் அன்பின் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

2010ம் ஆண்டில் 12 மாதங்களும் நம்மை கிருபையாக வழிநடத்தின தேவாதி தேவனைத் துதிக்கிறோம். ஜெபித்த, கொடுத்த, உழைத்த ஒவ்வொருவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக! **துதி, கனம், மகிமை இயேசுகிறிஸ்துவுக்கே!**

2011ம் ஆண்டில் தமிழ்நாட்டின் கிராமங்களில் வசிக்கும் **முஸ்லீம் மக்களுக்காக** விசேஷ ஜெபம் ஏறெடுக்கவும், அவர்களுக்கு ஏற்ற கைப்பிரதிகள் விநியோகிக்கவும் வாஞ்சிக்கிறோம்.

"**இயேசுவே வழி, சத்தியம், ஜீவன். இயேசுகிறிஸ்துவை யல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்**" என்ற சத்தியம் கிராம முஸ்லீம் மக்கள் மத்தியிலும் கடந்து செல்ல ஜெபியுங்கள்.

2004ம் ஆண்டு "**100-கிராம ஊழியம்**" மாதாந்திரப் பத்திரிகையில் "**இயேசுவுக்கு சாட்சிகள்**" என்ற T.V. நிகழ்ச்சிகள் வெளிவர முதல்முறையாக ஜெபிக்கக் கேட்டிருந்தோம். இந்த தரிசனமானது 2011ம் ஆண்டில் செயல்முறைக்கு வர ஜெபியுங்கள்.

**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

07.12.2010

கிறிஸ்துவின் பணியில்,

**P.T. கிறிஸ்டோபர் & ஸ்டீபன் கிறிஸ்டோபர்**

புத்தாண்டு வாக்குத்தத்த செய்தி :

சகோ.P.T. கிறிஸ்டோபர் – TVGM ஸ்தாபகர்.

# முந்தின சீரைப் பார்க்கிலும் உங்களுக்கு நற்சீர் உண்டாகச் செய்வேன். எசே.36:11

என் பாதகங்களை நான் நெய்யினால் கழுவினேன்; கன்மலையிலிருந்து எனக்காக எண்ணெய் நதியை போல ஓடி வந்தது; அந்தச் செல்வநாட்களின் சீர் இப்போதிருந்தால் நலமாயிருக்கும் ( **யோபு 29:6** ) என யோபுவைப் போல அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் என் அன்பு கர்த்தருடைய பிள்ளைகளே, தேவஊழியரே!

2011ம் ஆண்டில் பின்வருமாறு கர்த்தர் உங்களை ஆசீர்வதிக்கும்படி இப்பொழுதே **உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள்.**

சங். 144 :12 – 14 எங்கள் குமாரர் இளமையில் ஓங்கி வளருகிற விருட்சக் கன்றுகளைப் போலவும், எங்கள் குமாரத்திகள் சித்திரந்தீர்த்த அரமனை மூலைக் கற்களைப் போலவும் இருப்பார்கள்.

எங்கள் கஞ்சியங்கள் சகலவித வஸ்துக் களையும் கொடுக்கத்தக்கதாய் நிரம்பி யிருக்கும்; எங்கள் கிராமங்களில் எங்கள் ஆடுகள் ஆயிரம் பதினாயிரமாய்ப் பலுகும். எங்கள் எருதுகள் பலத்தவைகளா யிருக்கும்; சத்துரு உட்புகுதலும் குடியோடிப் போகுதலும் இராது; எங்கள் வீதிகளில் கூக்குரலும் உண்டாகாது.

என் அன்பு கர்த்தருடைய பிள்ளைகளே!

மேற்கண்ட ஆசீர்வாதங்களை கர்த்தர் உங்களுக்குக் கட்டளையிடுவாராக.

**சங். 144 : 15 இவ்விதமான சீரைப் பெற்ற ஜனம் பாக்கியமுள்ளது.**

பக்தன் பாடுகிறார்:

***ஒன்று இரண்டென எத்தனை வருடங்கள்***
***கனவென கழிந்தது பார்***
***எஞ்சிய நாட்களை வஞ்சிக்காது***
***தேவ போரினில் ஈடு படு.***
***சிந்திப்பீர், சிந்திப்பீர்***
***காலங்களை சிந்திப்பீர்***
***இயேசுகிறிஸ்துவின் வேலை ஒன்றே***
***இன்று பிரதானம்.***

**ஆம் பிரியமானவர்களே!**

**இயேசுகிறிஸ்துவின் வேலை ஒன்றே இன்று பிரதானம்.**

காலத்தை கவனித்துப் பாருங்கள். 2010ம் வருடத்தை இப்பொழுது தான் துவங்கியதுபோலிருந்தது. ஆனால் ஆண்டு ஒன்று முடிந்து விட்டது.

2011ம் வருடத்தை துவக்கி இருக்கிற உங்கள் மனதிலே, மேற்கண்ட பாடலும், வரியும் எப்பொழுதும் தொனித்துக் கொண்டே இருக்கட்டும்.

**இயேசுகிறிஸ்துவின் வேலை ஒன்றே பிரதானம்** என்ற தரிசனத்தோடு ஓடும்பொழுது,

**முந்தின சீரைப் பார்க்கிலும்**
**உங்களுக்கு**
**நற்சீர் உண்டாகச் செய்வேன்**

என தேவன் வாக்களிக்கிறார்.

**ஆகாய் 2: 9 கூறுகிறது :**

***முந்தின ஆலயத்தின் மகிமையைப் பார்க்கிலும், இந்தப் பிந்தின ஆலயத்தின் மகிமை பெரிதாயிருக்கும்.***

யோவான் 2ம் அதிகாரத்தில் "**முந்தின ரசத்தைப் பார்க்கிலும், பிந்தின ரசம் தித்திப்பாயிருந்தது**" என வாசிக்கிறோம். காரணம் : **இயேசுகிறிஸ்து**.

2010ம் ஆண்டைக் காட்டிலும், 2011ம் ஆண்டு உங்கள் வாழ்க்கையில் தித்திப்பாய் இருக்கும்.

2010ம் ஆண்டைக் காட்டிலும் 2011ம் ஆண்டு உங்கள் ஊழியத்தின் மகிமை பெரிதாயிருக்கும். ஆமென்!.

காரணம் : **இயேசுகிறிஸ்து**.

என் அன்பு தேவஊழியரே, விசுவாசியே! உங்கள் உள் மனம் சொல்லட்டும்.

**இயேசுகிறிஸ்துவின் வேலை ஒன்றே பிரதானம்.**

எத்தனை வருடங்கள் நம்முடைய வாழ்க்கையில் கடந்து விட்டது. கடந்து சென்ற நிமிடமும் இனிமேல் திரும்பி வரப் போவதில்லை.

கடந்து சென்ற எந்த ஆசீர்வாதமும் இனிமேல் திரும்பி வரப் போவதில்லை.

ஆகையால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்.

2010ம் ஆண்டில் செய்து முடிக்க வேண்டிய சுவிசேஷப் பணியை, ஆலயக் கட்டிடப் பணியை மற்றும் சமூக சேவைப் பணியை செய்து முடிக்க முடியவில்லையே என அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் கர்த்தருடைய பிள்ளைகளே!

2011ம் ஆண்டில் கர்த்தர் முதல் ஆசீர்வாதமாக அவைகளை சீர்ப்படுத்தி ஸ்திரப்படுத்துவாராக.

**வேதம் கூறுகிறது :**

**ஆமோஸ் 9:12** அந்நாட்களில் விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை நான் திரும்ப எடுப்பித்து, அதின் திறப்புகளை அடைத்து, அதில் பழுதாய்ப் போனதைச் சீர்ப்படுத்தி, பூர்வநாட்களில் இருந்ததுபோல அதை ஸ்தாபிப்பேன்.

மேலும் கர்த்தர் சொல்கிறார் :

**முந்தின சீரைப் பார்க்கிலும்**
**உங்களுக்கு**
**நற்சீர் உண்டாகச் செய்வேன்**

ஆமென்!

**நீதி. 5 :21**

"மனுஷனுடைய வழிகள் கர்த்தரின் கண்களுக்கு முன்பாக இருக்கிறது; அவனுடைய வழிகளெல்லாவற்றையும் அவர் சீர்தூக்கிப் பார்க்கிறார்".

**தேவன் கொடுக்கும் ஆலோசனை:– நீதி.4:26**

"உன் கால் நடையைச் சீர்தூக்கிப் பார்".

**ரோமர் 13 : 13,14**

"களியாட்டும் வெறியும், வேசித்தனமும் காமவிகாரமும், வாக்கு வாதமும் பொறாமையும் உள்ளவர் களாய் நடவாமல், பகலிலே நடக்கிற வர்கள் போலச் சீராய் நடக்கக் கடவோம். துர் இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுங்கள்.

அப்பொழுது , **முந்தினச் சீரைப் பார்க்கிலும் தேவன் உங்களுக்கு நற்சீர் உண்டாகச் செய்வார்.** ஆமென்.

**பிரசங்கி 7 : 3**

"முகதுக்கத்தினாலே இருதயம் சீர்ப்படும்"

தேவனுடைய வார்த்தைகளை, வசனங்களைப் படிக்கும்போது, தியானிக்கும்போது, நம்முடைய மனசாட்சியே நம்மை குற்றவாளியாக தீர்க்கிறது.

உடனே இருதயத்திலே ஒரு துக்கம். அகத்தின் அழகு முகத்திலே தெரியும் என்பதைப் போல, இருதயத்தின் துக்கம் முகத்திலே தெரிகிறது.

ஆனாலும் வேதம் சொல்கிறது,

"**முகதுக்கத்தினாலே இருதயம் சீர்ப்படும்**" அல்லேலுயா.

**கர்த்தர் சொல்லுகிறார்: எசேக்.16:55**
நீயும் உன் குமாரத்திகளும் உங்கள் முந்தின சீருக்குத் திரும்புவீர்கள்.

**எரேமியா 31 : 21,22**

**". . . நீ நடந்த வழியாகிய பாதையின்மேல் உன் மனதை வை .. சீர்கெட்டுப் போன குமாரத்தியே, எந்த மட்டும் விலகித் திரிவாய்?"**

**2010ம் ஆண்டில்**

**உன் சீர்கேடு என்ன?**

**எதை விட்டு விலகவேண்டும்?**

**1தீமோ. 4 :7**

"சீர்கேடும் கிழவிகள் பேச்சுமாயிருக்கிற கட்டுக்கதைகளுக்கு விலகி, தேவபக்திக்கேதுவாக முயற்சி பண்ணு".

**1தீமோ. 6:20,21**

"ஓ தீமோத்தேயுவே, உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக் கொண்டு, ஞானமென்று பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு.
சிலர் அதைப் பாராட்டி, விசுவாசத்தை விட்டு வழுவிப் போனார்கள்." என பவுல் தீமோத்தேயுவுக்கு எழுகிறார்.
என் அன்பு தேவஊழியரே, விசுவாசிகளே!

**வீண் பேச்சுகளுக்கும், கொள்கைகளுக்கும் விலகுங்கள்.**

**ஏற்ற மேய்ப்பர்களைத் தருவேன்**

எரே. 3: 14,15

**சீர்கெட்ட பிள்ளைகளே, திரும்புங்கள்** என்று கர்த்தர் சொல்லுகிறார்;

**நான் உங்கள் நாயகர்;**

**நான் உங்களை ஊரில் ஒருவனும், வம்சத்தில் இரண்டு பேருமாகத் தெரிந்து,உங்களைச் சீயோனுக்கு அழைத்துக்கொண்டுவந்து, உங்களுக்கு என் இருதயத்துக்கு ஏற்ற மேய்ப்பர்களைக் கொடுப்பேன், அவர்கள் உங்களை அறிவோடும் புத்தியோடும் மேய்ப்பார்கள்.**

**எச்சரிக்கையாயிருங்கள்**

**எபிரெயர் 12 : 16**

ஒருவனும் வேசிக்கள்ளனாகவும், ஒருவேளைப் போஜனத்துக்காகத் தன் சேஷ்டப்புத்திரபாகத்தை விற்றுப்போட்ட ஏசாவைப் போலச் சீர்கெட்டவனாகவும் இராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்.

**1பேதுரு 5:10**

கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சகாலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி நிலைநிறுத்துவாராக.

**ஆவிக்குரிய என் அன்பு கர்த்தருடைய பிள்ளைகளே!**

**கலாத்தியர் 6 :1,2**

சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப் பண்ணுங்கள்; நீயும் சோதிக்கப்படாத படிக்கு உன்னைக் குறித்து எச்சரிக்கையாயிரு.

**ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்.**

**1கொரி1:10** சகோதரரே நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தி யிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.

**2கொரி. 13: 11** கடைசியாக, சகோதரரே, சந்தோஷமாயிருங்கள், நற்சீர் பொருந்துங்கள்,..அப்பொழுது அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணமாகிய தேவன் உங்களோடேகூட இருப்பார்.

2011ம் ஆண்டிற்குள் அடியெடுத்து வைத்திருக்கும் கர்த்தருடைய பிள்ளைகளே!

**கர்த்தரின் வார்த்தையை கேளுங்கள்.**

**ஓசியா 14 : 4 – 7.**

நான் அவர்கள் சீர்கேட்டைக் குணமாக்குவேன்; அவர்களை மனப்பூர்வமாய்ச் சிநேகிப்பேன்; என் கோபம் அவர்களை விட்டு நீங்கிற்று.

**நான் இஸ்ரவேலுக்குப் பனியைப் போலிருப்பேன்;**
**அவன் லீலிப்புஷ்பத்தைப் போல் மலருவான்;**
**லீபனோனைப் போல் வேரூன்றி நிற்வான்.**
**அவன் கிளைகள் ஓங்கிப் படரும்,**
**அவன் அலங்காரம் ஒலிவ மரத்தினுடைய அலங்காரத்தைப் போலவும்,**
**அவனுடைய வாசனை லீபனோனுடைய வாசனையைப் போலவும் இருக்கும்.**
**அவன் நிழலில் குடியிருக்கிறவர்கள் திரும்புவார்கள்;**
**தானிய விளைச்சலைப் போலச் செழித்து, திராட்சச் செடிகளைப் போலப் படருவார்கள்;**
**அவன் வாசனை லீபனோனுடைய திராட்சரசத்தின் வாசனையைப் போல இருக்கும்.**

2010ம் வருடத்தின் சீரைப் பார்க்கிலும், 2011ம் வருடத்தில் உங்களுக்கு நற்சீர் உண்டாகும்.

பின்வருமாறு உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள்.

**2010ம் வருடத்தின்**
**சீரைப் பார்க்கிலும்**
**என் தேவன் 2011ம் வருடத்தில்**
**எனக்கு**
**நற்சீர் உண்டாகச் செய்வார்.**

ஆமென்.

**"100 - கிராம ஊழியம்" - மாதாந்திர பத்திரிகை (தமிழ் / ஆங்கிலம்)**

**2011ம் ஆண்டிற்கான உங்கள் சந்தாவை புதுப்பித்து விட்டீர்களா ?**

**ஆண்டு சந்தா**

உள்நாடு – ரூ. 25

வெளிநாடு– ரூ. 250

## அறிவிப்பு

2008 ஜனவரி முதல் 2010 டிசம்பர் முடிய கடந்த மூன்று ஆண்டுகளில் ஒருமுறை கூட TVGM ஊழியத்தை காணிக்கையினாலோ அல்லது பத்திரிகை சந்தா மூலமாகவோ தாங்காதவர்களுக்கு 2011 ஏப்ரல் முதல் 100–கிராம ஊழியம் மாதாந்திர பத்திரிகை அனுப்புவதை தற்காலிகமாக நிறுத்தி வைக்கிறோம்

மீண்டும் நீங்கள் தொடர்பு கொள்ளும்போது பத்திரிகை அனுப்பி வைக்கிறோம் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தயவு செய்து உங்களுக்கு மாதாந்திர பத்திரிகை தமிழில் வேண்டுமா ? அல்லது ஆங்கிலத்தில் வேண்டுமா ? என்பதை தெரியப்படுத்தி உதவுங்கள்.

உங்கள் சார்பாக உங்கள் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் பத்திரிகை அனுப்பி வைக்க விரும்பினால் தயவுசெய்து அவர்களுடைய முழு முகவரி, தொலைபேசி எண், ஈமெயில் யாவையும் அனுப்பி வையுங்கள். எங்கள்

ஈமெயில் : **100village@tvgm.org**

வெப்சைட் : **www.tvgm.org**

முழு முகவரி : பக்கம் 16

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ. 4 : 5**

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் **'வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்'** இலவசமாக வழங்கி **இயேசுவை**அறிவித்தல்.

## புதுக்கோட்டை மாவட்டம் - ஆலங்குடி தாலுகா

# 100 - கிராம ஊழியம்

**நோக்கம்:** **2011 ஜனவரி 17** திங்கள் காலை 9 மணி முதல் **ஜனவரி 21** வெள்ளி இரவு 10 மணி முடிய **ஆலங்குடி தாலுகாவிலுள்ள கிராமப் பகுதிகளில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம்** :**2011 ஜனவரி 17** திங்கள் காலை **9 - 1** மணி

**கடைசி நாள் ஜெபம் : 2011 ஜனவரி 21** வெள்ளி இரவு **7 - 10** மணி

**( 2011 ஜனவரி 17 -21 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி )**

**உபவாச ஜெபம் நடைபெறும் இடம்**

**சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்,** TVGM

C/o. **இயேசுகிறிஸ்துவின் பேழை சபை**

**S.S. தெரு, கும்மங்குளம் ரோடு,ஆலங்குடி - 622301**

**புதுக்கோட்டை மாவட்டம். செல்: 99421 33058**

உதவி செய்ய முன் வந்த **பாஸ்டர் லாரன்ஸ்** அவர்களுக்கு நன்றி!

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் **5** நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**பிரயாணப்படி :** தமிழ்நாட்டிலிருந்து ரூ. **5** செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**முக்கிய அறிவிப்பு :** 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.

**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**சகல தொடர்புகளுக்கும் :** சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர், **100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 Cell : 94871 92763**

**ஸ்தாபகர் சகோ. P.T. கிறிஸ்டோபர் – செல் : 94435 44628**

## 2010 நவம்பர் மாதம் 100 – கிராம ஊழிய அறிக்கை

1. மாவட்டம் : **சிவகங்கை**
2. யூனியன்  : **சாக்கோட்டை**
3. ஊழியம் நடைபெற்ற தேதி : **15.11.2010** முதல் **19.11.2010** முடிய
4. கூடுமிடம் கொடுத்தவர் : **பாஸ்டர் ஸ்டீபன், எர்மோன் சர்ச்**
5. முதல் நாள், கடைசிநாள், உணவு, இனிப்பு மற்றும் பார்சல் செலவுகள் பொறுப்பெடுத்து உதவியவர் : **பாஸ்டர் அமல்ராஜ், பாகனேரி.**
6. ஊழியம் செய்த கிராம ஊழியர்களின் எண்ணிக்கை : **52 பேர்**
7. முதல் நாள் ஜெபத்தில் தேவசெய்தி கொடுத்தவர்: **பாஸ்டர் ஸ்டீபன்**
8. கடைசி நாள் ஜெபத்தில் செய்தி கொடுத்தவர் : **சகோதரி ரெபேக்கா**
9. கடைசி நாள் ஆசீர்வாத ஜெபம் : **பாஸ்டர் கைவல்யம் டேவிட்**
10. இலவசமாக வழங்கிய லூக்கா சுவிசேஷப் புத்தகங்கள் : **11,775**
11. கைப்பிரதிகள் : **15,000 இயேசுவே இரட்சகர்** , **5000** மற்ற கைப்பிரதிகள்
12. விநியோகிக்கப்பட்ட சிலுவைக்கொடிகள் : **10,000**
13. வாஞ்சையுள்ள புறமத நண்பர்களின் விலாசங்கள் : **181 பேர்**

கிராம ஊழியர்கள் – 52 பேர்



குழுவாக ஜெபித்தல்



## கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

**குழு 1 : சகோதரிகள் :** மரியம்மாள், கிரேஸ் பத்மா, எஸ்தர்பேபி, பாக்கியம் **காரைக்காரன்குடியிருப்பு, வடக்கு குடியிருப்பு** பகுதிகளில் ஜெபிக்கக் கேட்ட அநேகருக்காக ஜெபித்தோம். **அரியக்குடியில்** ஒரு பெண் தன் மகளிடம் நாங்கள் கொடுத்த சுவிசேஷப் புத்தகத்தை வாங்காதே என்று கூறினாள். வேறு ஒரு பெண் உங்கள் புத்தகத்தை வாங்கினால் எங்க சாமி வெளியே போய் விடும் என்று கூறினாள். ஒரு மனிதன் எங்களைப் பார்த்து மதப்பிரச்சாரம் செய்ய வந்தீர்களா? மரியாதையாக போய்விடுங்கள், இல்லையென்றால் உங்களை மரத்தில் கட்டி தோலை உரித்துவிடுவேன் என்று மிரட்டினார். மொத்தம் 750 சுவிஷேப் புத்தகங்கள், 800 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 2 :சகோதரிகள் : தேவகிருபை, லீதியாள்,மணியம்மாள்,சலோமிசம்மனசு**

எங்களுக்கு கொடுத்த கிராமங்களில் லூக்கா சுவிசேஷம் கொடுத்து, சத்தியத்தை அறிவித்தோம். மொத்தம் 1000 சுவிஷேப் புத்தகங்கள், 850 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 3 :சகோதரிகள் : தேவநேசம், எஸ்தர் கனகாம்புஜம், மாலா, லூர்து.**

கோட்டையூர், ஸ்ரீராம் பகுதியில் இயேசுவைப் பற்றி அறிவித்தோம். ஒரு சிலர் தவிர மற்ற யாவரும் சுவிசேஷப் புத்தகத்தை வாங்கிக் கொண்டார்கள். மொத்தம் 800 சுவிஷேப் புத்தகங்கள், 830 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு4:சகோதரிகள்:அந்தோணிமேரி, கஸ்துரி, அமிர்தம், சீலா, ரோணிக்கம்.**

ஒரு தெருவில் நாங்கள் கொடுத்த சுவிசேஷப் புத்தகங்களை எல்லாம் சேர்த்து கொண்டு, எங்களிடம் திருப்பி தந்தார்கள். ஏன் திருப்பி தருகிறீர்கள் ? உங்களுக்கெல்லாம் ஒரு நல்ல செய்தி இதில் இருக்கிறதே, நாங்கள் தொலைதுாரத்திலிருந்து இவ்வளவு வயதான காலத்தில் கொடுக்கும் கடவுளின் புத்தகத்தை வேண்டாம் என்கிறீர்களே ? என்று எங்கள் சாட்சிகளை சொல்லவும் அவர்கள் மீண்டும் புத்தகங்களை ஆர்வமாக வாங்கி கொண்டார்கள். **கமலை** கிராமத்தில் அநேக குடிகாரர்கள் எங்களிடம் இப்படி அலைகிறீர்ளே ? எங்களுக்கு ஏதாவது உதவி செய்யக்கூடாதா ? என்றார்கள். மொத்தம் 1000 சுவிஷேப் புத்தகங்கள், 820 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 5 :சகோதரிகள் : வசந்தா, அன்னக்கிளி, கிளமெண்ட்ஸ்மேரி, லூயிஸ் அம்மாள்.**

நாங்கள் சுவிசேஷப் புத்தகம் கொடுத்த போது, ஒரு அம்மா நாங்களே மற்றவர்களுக்கு சொல்லுகிறவர்கள் எங்களிடம் சொல்ல வந்து விட்டீர்களா, துாரப் போங்கள் என்று திட்டினார். கலையப்பன் நகரில் நாங்கள் கொடுத்த சிலுவைக் கொடியை வாங்கி அதிலுள்ள ஜெபத்தை முழங்கால் படியிட்டு வாசித்து ஜெபித்தார்கள். மொத்தம் 1500 சுவிஷேப் புத்தகங்கள், 830 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 6 :சகோதரர்கள் : யோசுவா, ஜோசப் முரளிதரன், ஜெபமலைநாதன், பீட்டர்.**

நாங்கள் சென்ற கிராமங்களில் மொத்தம் 850 சுவிஷேப் புத்தகங்கள், 800 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 7 :சகோதரிகள் : ராணி சந்திரா, மேரிமீனா, மரியாள், ஜோதிமணி, செல்லக்கனி.**

**மருதுபாண்டி** கிராமத்தில் ஒரு வீட்டில் இயேசு உங்களை நேசிக்கிறார் என்று லூக்கா சுவிசேஷம் கொடுத்தோம். அந்த வீட்டிலிருந்தவர்கள் எங்களை அழைத்து அவர்களுடைய குடும்ப கஷ்டங்கள், மனபாரங்களை சொல்லி கண்ணீர் விட்டார்கள். அவர்களுக்காக ஜெபித்தோம். கடவுளே உங்களை எங்கள் வீட்டுக்கு அனுப்பி வைத்திருக்கிறார் என்றார்கள். வேறு ஒரு இடத்தில் கருப்பு வஸ்திரம், மாலை அணிந்த வாலிபர் எங்களைக் கூப்பிட்டு இயேசு புத்தகத்தை நாங்கள் படிக்கலாமா ? என்று கேட்டார்கள் நாங்கள் அவர்களிடம் எங்கள் சாட்சியை சொன்னோம். அவர்கள் சந்தோஷமாக லூக்கா சுவிசேஷத்தை வாங்கினார்கள். மொத்தம் 1000 சுவிஷேப் புத்தகங்கள், 840 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 8 :சகோதரர்கள் : மாற்கு மாரியப்பன், மகாராஜன், நோவா, அந்தோணி.**

**கழனிவாசல்** கிராமத்தில் ஒரு ஆர்.சி

சகோதரன் எங்களிடம் எப்படி தாயார் இல்லாமல் மகன் வரமுடியும் இதற்கு தகுந்த பதில் சொல்லி விட்டு போங்கள் என்று விதண்டவாதம் பண்ணினார். வேத வசனத்தை எடுத்து வாசித்து காண்பித்த போது, அதை ஏற்றுக் கொண்டு இனி நாங்கள் இயேசு ஒருவரையே சேவிப்போம் என்றார். மொத்தம் 900 சுவிசேஷப் புத்தகங்கள், 850 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 9 :சகோதரிகள் :ரூத் கலாவாணி, ரெபேக்கா, கனி, தெபோராள்,அன்னாள்**

**சிறுவயல்** கிராமத்தில் ஊழியம் செய்தபோது எங்கள் குழுவில் ஒரு சகோதரியை பெரிய நாய் மேலே ஏறி கடிக்க வந்தது. அவர்கள் பயப்படாமல் இயேசுவே என்னை காப்பாற்றும் என்று சத்தமிட்டவுடன் நாய் போய் விட்டது. மொத்தம் 1100 சுவிசேஷப் புத்தகங்கள், 880 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 10 :சகோதரர்கள் : பால்ராஜ், சூசைமாணிக்கம், ஆபிரகாம், தாவீது.**

நாங்கள் கிராமங்களில் ஊழியம் செய்து கொண்டு வரும்போது, இங்கு பணம் வசூல் செய்ய வந்திருக்கிறீர்களா ? என்று ஒருவர் கேலியாக பேசினார். மற்றொருவர் களவு செய்வதற்கு உளவு பார்க்க வந்திருக்கிறார்கள் என்றார். இவர்களுக்காக ஜெபித்து கடந்து வந்தோம். மொத்தம் 900 சுவிசேஷப் புத்தகங்கள், 800 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 11 :சகோதரிகள் : எஸ்தர், பிச்சையம்மாள், கிருபா பழனியம்மாள், எஸ்தர் எபிநேசர், தேவபாக்கியம்.**

கிராமங்களில் அனைவரும் சுவிசேஷப் புத்தகங்களை வாங்கி கொண்டார்கள். மொத்தம் 850 சுவிஷேப் புத்தகங்கள், 800 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 12 :சகோதரர்கள் : பிரேம் ஆனந்த், தாஹாகனி, பாபுசாலமோன், ஆசீர்பாண்டி.**

**வேளாரேந்தல்** கிராமத்தில் ஆர்.சி. கிறிஸ்தவர்கள் பலர் சுவிசேஷப் புத்தகத்தை வாங்க மறுத்தார்கள். இவர்களுக்கு வேதவசனங்களை விளக்கியபோது ஒரு சிலர் ஏற்றுக் கொண்டார்கள். மொத்தம் 900 சுவிசேஷப் புத்தகங்கள், 850 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**தேவனுக்கே மகிமை!**

## 2011 ஜனவரி மாத இயேசுவை விரும்புவோர் முகாம்

மாவட்டம் : திருநெல்வேலி
யூனியன் : இராதாபுரம்
நாள் : 22.01.2011 சனி
நேரம் : காலை 9 மணி

**நடைபெறும் இடம்**

**பாஸ்டர் . A. ரமேஷ்**
**பெத்தானி ஏ.ஜி. சர்ச்**
**காரிக்குளம், தாலுகா ஆபிஸ் வழி**
**இராதாபுரம் - 627 111.**
**திருநெல்வேலி மாவட்டம்.**

## 2011 புத்தாண்டு வாக்குத்தத்தக் கூட்டம்

**முந்தின சீரைப் பார்க்கிலும் உங்களுக்கு நற்சீர் உண்டாகச் செய்வேன்.**

**நாள் : 01.01.2011** சனி
**துதி ஆராதனை :** 6PM - 7PM
**வாக்குத்தத்த செய்தி:** 7PM-8PM

**இடம்:**

**TVGM தலைமை அலுவலகம்,**
**100 - கிராமம்,**
**சோமரசம்பேட்டை.**
**திருச்சி - 620 102.**

**இயேசுவுக்காக பெரிய காரியங்களைத் திட்டமிடுங்கள் !**
**இயேசுவினிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்பாருங்கள் !**

## 2011 நடமாடும் ஜெப ஊழியம்

## மாருதி ஆம்னி வேன் ( விலை ரூ. 3 லட்சம் )

TVGM அறிமுகப்பணி அலுவலகம் – நாகர்கோவிலில் 10 சகோதரிகள் பட்டணம், பட்டணமாக, கிராமம் கிராமமாக அலைந்து திரிந்து "**ஜெபஊழியம்**" செய்து வருகிறார்கள். அநேக மக்கள் அற்புதசுகம் அடைந்து, அநேக நன்மைகளை பெற்று வருகிறார்கள்.

சகோதரிகளின் அலைச்சலையும், நேரத்தையும் மிச்சப்படுத்தி இன்னும் அதிகமான மக்களை சந்தித்து ஜெபித்து வர வசதியாக ஒரு ஆம்னி வேன் வாங்கி கொடுக்க வாஞ்சிக்கிறோம். இதற்காக ஜெபியுங்கள். தகுதியானவர் களிடம் அறிமுகம் செய்யுங்கள்.

செல் : **94435 44628** P.T. கிறிஸ்டோபர்.
போன் : **0431 - 2607241** **TVGM** ஸ்தாபகர்

## யோவான் சுவிசேஷப் புத்தகம் ( ரூ. 2 லட்சம் )

100 – கிராம ஊழியத்தின் மூலம் மாதந்தோறும் சராசரியாக **20,000** யோவான் சுவிசேஷப் புத்தகங்கள் வீடுகள்தோறும் இலவசமாக விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதற்காக தேவாதி தேவனைத் துதியுங்ள்.

2011ம் வருடத்தில் 2 லட்சம் யோவான் சுவிசேஷப் புத்தகங்கள் கிராமத்திலுள்ள 2 லட்சம் வீடுகளுக்கு இலவசமாக விநியோகிக்கத் திட்டமிட்டு, சென்னை IBL ஸ்தாபனத்தில் மாதந்தோறும் ரூ.20,000 வீதம் 10 மாதம் செலுத்துவதாக வாக்களித்து 2 லட்சம் சுவிசேஷப் புத்தகங்கள் வாங்கியுள்ளோம்.

உங்கள் சபை மூலமாகவோ அல்லது குடும்பத்தின் சார்பாகவோ 20 ஆயிரம் வீடுகளுக்கு "**யோவான் சுவிசேஷப் புத்தகம்**" கிராம மக்களுக்கு இலவசமாக அளித்து "**இயேசுவை**" அறிவிக்க முன் வருவீர்களா ?

## THE AMBASSADOR SCHOOL OF LEARNING ( TASOL)

***குறித்தகாலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது;***
***முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது;***
***அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு. ஆபகூக் 2 : 3***

கிறிஸ்தவ தலைமைத்துவ மையம் அமைத்து அநேக கிறிஸ்தவ அதிகாரிகள் நம் தேசத்தில் உயர்மட்ட அளவில் சேவை புரிய வேண்டும் என்ற தரிசனத்தை செயல் படுத்த முதல் கட்டமாக நிலம் வாங்கும் கட்டத்தில் உள்ளோம்.

**நிலத்தில் விலை ரூ. 30 லட்சம்,**

ரூ.1 லட்சம் கொடுக்கக்கூடிய 30 பங்காளருக்காக ஜெபித்து வருகிறோம். 07.12.2010 கணக்குப்படி உத்தேசமாக ரூ.**3,50,000** செலுத்தப்பட்டுள்ளது. மீதித் தேவைகளை **கர்த்தர் அதிசயமாக 2011ம் ஆண்டில் சந்திக்கும்படியாக ஜெபியுங்கள்.**

## ஆலயத்தைக் கட்டுங்கள்;
## அதின்பேரில் நான் பிரியமாயிருப்பேன்,
## அதினால் என் மகிமை விளங்கும். ஆகாய் 1: 8.

ஜெபவீடு அளவு குறைந்த பட்சம் **15' X 30' = 450 சதுர அடி.**
4 பக்க கலர் / ஆஸ்பெட்ராஸ் ஷீட் போட சதுர அடி – ரூ. 500
4 பக்க கலர் / கான்கிரேட் போட சதுர அடி – ரூ. 750

எந்தவிதமான கிறிஸ்தவ ஆலயமில்லாத கிராமத்தில் வாடகை வீட்டில் குடும்பமாக தங்கியிருந்து, ஊழியம் செய்து, ஞாயிறு ஆராதனை நடத்தி வரும் ஊழியருக்கு கிராமத்தில் உங்கள் குடும்பம் சார்பாகவோ அல்லது சபை சார்பாகவோ 2011ல் ஒரு ஜெபவீடு கட்டிக் கொடுப்பதற்கு முன் வருவீர்களா ?

**யாரோ ஒருவர் கட்டி வைத்த ஆலயத்தில் ஆனந்தமாக ஆராதிக்கிற நீங்கள், ஏதோ ஒரு ஊழியருக்கு ஒரு ஜெபவீட்டையாவது கட்டி கொடுத்து, கிராம மக்கள் ஆனந்தமாக ஆராதிக்க உதவி செய்ய முன்வருவீர்களா ?**

2004 மே 1ம் தேதியிலிருந்து 07.12.2010 வரை கடந்த 7 ஆண்டுகளில் **73 ஜெபவீடுகளின் குறைவேலைகளை** TVGM மூலம் கட்டி முடிப்பதற்கு, பல தேவபிள்ளைகள் மூலம் கர்த்தர் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை!

தற்சமயம் **103 கிராம ஊழியர்கள்** தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலிருந்து, பல சபைகளிலிருந்து தாங்கள் கட்டிக் கொண்டிருக்கும் **ஜெபவீட்டிற்கு கட்டிட குறை வேலைகள் மற்றும் மேற்கூரை செய்து முடிப்பதற்கு** TVGM க்கு விண்ணப்பம் செய்து, உதவி கேட்டு போன் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். எங்களால் பதில் சொல்லி முடியவில்லை.

**உங்கள் பதில் என்ன?**

## TVGM ஏலீம் சிறுவர் இல்லம் - திருச்சி







TVGM சிறுவர் இல்லம் கட்டிடப் பணிகள் மூன்றிலொரு பங்கு முழுமையாக கட்டி முடிக்க கர்த்தர் உதவிச் செய்தார்.

மிக முக்கியமாக, **8 குளியலறை, 8 கழிவறை** மிக அவசியமாக கட்டி முடிக்க வேண்டியதுள்ளது.

1 குளியலறை அத்துடன் கழிவறை கட்ட – **ரூ. 30,000/- தேவை**
1 சிறுபிள்ளையை பராமரிக்க மாதத்திற்கு – **ரூ. 1000/- தேவை**

**ஜெபியுங்கள் ! உதவுங்கள் !**

## புதுக்கோட்டை மாவட்டம் இயேசுவுக்கே!

## இயேசுவுக்கே புதுக்கோட்டை மாவட்டம்!

2011ம் ஆண்டில் 100 – கிராம ஊழிய பத்திரிகை வாசகர்கள் யாவரும் தொடர்ந்து ஜெபிப்பதற்காக பின்வரும் குறிப்புகளை வெளியிட்டுள்ளோம்.

தமிழ்நாட்டில் புதுக்கோட்டை மாவட்டத்தில் சுவிசேஷம் மிகக் குறைவாக காணப்படுகிறது. ஆதலால் ஒவ்வொரு சபைகளும் இந்த ஆண்டு புதுக்கோட்டை மாவட்டத்தை ஒரு இலக்காக வைத்து ஜெபிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

| பஞ்சாயத்து யூனியன் | கிராம பஞ்சாயத்து | சிறிய கிராமம் |
|---|---|---|
| 1. அன்னவாசல் | 43 | 296 |
| 2. அரிமளம் | 32 | 172 |
| 3. திருமயம் | 33 | 231 |
| 4. பொன்னமராவதி | 42 | 223 |
| 5. புதுக்கோட்டை | 28 | 297 |
| 6. குன்றண்டார்கோவில் | 48 | 240 |
| 7. விராலிமலை | 45 | 268 |
| 8. கரம்பக்குடி | 40 | 159 |
| 9. திருவரங்குளம் | 48 | 313 |
| 10. கந்தர்வக்கோட்டை | 36 | 110 |
| 11. அறந்தாங்கி | 52 | 242 |
| 12.மணல்மேல்குடி | 28 | 143 |
| 13.ஆவுடையார்கோவில் | 35 | 301 |
| **Total** | **510** | **2995** |

1. புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு சபை போதகர்களும் தங்கள் யூனியனிலுள்ள அனைத்து கிராமங்களின் பெயர்களை சொல்லி ஜெபிக்க சபை மக்களுக்கு ஆத்தும பாரத்தைக் கொடுத்து, அவர்களைக் கொண்டே ஜெபநடை செல்ல திட்டமிட ஜெபியுங்கள்.

2. உலகம் முழுவதிலுமிருந்து புதுக்கோட்டை மாவட்டத்திற்காக ஜெபிக்க **100–கிராம ஊழியம் பத்திரிக்கை** மூலமும், நாம் அனைவரும் **தேவசெய்தி கொடுக்கும் சபைகள்** மூலமும், **அலுவலக பணியாளர்கள், 100–கிராம ஊழியக்காரர்கள்,** மூலமும் ஜெபவீரர்களை கண்டுபிடிக்க ஜெபியுங்கள்.

3. ஒவ்வொரு யூனியனுக்கும் சென்று, ஜெபநடை செல்ல பஞ்சாயத்து மேப், கிராம மேப் தயார் செய்ய சரியான ஒரு நபரை கர்த்தர் நமக்குத் தரும்படி ஜெபியுங்கள்.

## இயேசு கூறுகிறார் :

***இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.***

1. புதுக்கோட்டை மாவட்டத்தில் கிறிஸ்தவ மிஷன் ஆஸ்பத்திரிகள் எழும்ப ஜெபியுங்கள்.
2. கிறிஸ்தவகல்லூரிகள் வரும் படி ஜெபியுங்கள்.
3. கிறிஸ்தவ சமூகசேவை நிறுவனங்கள் அதிக சேவை செய்ய ஜெபியுங்கள்.
4. கிறிஸ்தவ அநாதை சிறுவர்கள் இல்லம் ஜெபியுங்கள்.
5. கிறிஸ்தவ முதியோர் இல்லம் திறக்கப்பட ஜெபியுங்கள்.
6. கிறிஸ்தவர்கள் தொழில்கூடங்கள், வியாபார ஸ்தலங்கள் அமைத்து சேவை செய்ய ஜெபியுங்கள்.
7. கிறிஸ்தவ எய்ட்ஸ் சென்டர் வரும்படி ஜெபியுங்கள்.
8. அநேக வேதாகம கல்லூரிகள் எழும்ப ஜெபியுங்கள்.
9. திருச்சபைகள் எங்கும் எழும்ப ஜெபியுங்கள்.
10. கிறிஸ்தவ மிஷனெரி இயக்கங்கள் எழும்ப ஜெபியுங்கள்.
11. புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு யூனியனிலும் ஆவிக்குரிய முன்னேற்றங்களுக்காக ஜெபிக்கிற குழுக்களும், தாங்குகிற குழுக்களும், ஊழிய குழுக்களும் எழும்ப ஜெபியுங்கள்.
12. 2011ம் வருடத்தில் ஒவ்வொரு யூனியனிலும் கிராமங்கள்தோறும் நிலம் வாங்கப்பட்டு ஜெபவீடு கட்டப்பட ஜெபியுங்கள்.
13. **எதிர்பாராத பரிசுத்த எழுப்புதல்** ஏற்பட ஜெபியுங்கள்.

## விசேஷ ஜெபம் :

இன்று எங்குப் பார்த்தாலும் நிலத்தின் விலை விஷம் போல் ஏறிக் கொண்டே செல்வதை நாம் பார்க்கிறோம். ஆதலால் பட்டணங்களிலும், கிராமங்களிலும் ஊழியர்கள் நிலம் வாங்க முடியாமல் தவிக்கிறார்கள்.

எத்தனையோ நிலக்கிழார்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் கர்த்தருடைய ஆலயம் கட்ட தங்கள் நிலத்தில் ஒரு பகுதியை ஒதுக்கித் தரும்படி நாம் ஜெபிப்போம்.

எத்தனையோ கிறிஸ்தவர்கள் **ரியல் எஸ்டேட்** நடத்தி வருகிறார்கள். ஒவ்வொருவரும் ஜெபவீடு கட்டுவதற்கு நிலங்களை ஒதுக்கிக் கொடுப்பதற்கு ஒரு நல்ல **ஆத்தும தரிசனத்தை** கர்த்தர் கிருபையாக கொடுக்க ஜெபியுங்கள்.

என் அன்புக்குரியவர்களே! நாம் ஜெபித்துக் கொண்டேயிருப்போம். கர்த்தர் கிரியைச் செய்து கொண்டே இருப்பார்.

***மூளையால் சாதிக்க முடியாததை முழங்காலில் சாதிப்போம் !***

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**துதி, கனம், மகிமை - இயேசு கிறிஸ்துவுக்கே!**

## ஜெபத்தைக் கேட்டு தேவன் செய்த அற்புதங்கள்!

***1. பாஸ்டர் முத்துவேல், T. பளூர்.***

காணாமல் போன சைக்கிள் கிடைக்கும்படியாக கடிதம் மூலமாகவும், தொலைபேசி மூலமாகவும் ஜெபிக்கக் கேட்டிருந்தேன். தேவன் ஜெபத்தைக் கேட்டு காணாமல் போன சைக்கிளுக்குரிய முழு பணத்தையும் கிடைக்கும்படி செய்தார்.

***2 . சகோ. அன்பழகன், வேலூர்.***

என் மனைவியின் பிரசவத்திற்காக ஜெபிக்கக் கேட்டிருந்தேன். நீங்கள் ஜெபித்தீர்கள். நானும் 100–கிராம ஊழிய பத்திரிக்கையில் சாட்சி எழுதுவதாக பொருத்தனை செய்து ஜெபித்தேன். கர்த்தர் சுகபிரசவத்தில் அழகான ஆண் குழந்தையை கொடுத்தார்.

***3. சகோதரி ஷர்மிளா,***

எனக்கு அலர்ஜி சரியாகும்படியாக ஜெபிக்கக் கேட்டிருந்தேன். நீங்களும் ஜெபித்தீர்கள். கர்த்தர் சுகம் கொடுத்தார்.

**4. சகோ. ஞானமுத்து, நெல்லை.**

என் மூத்த மகனின் திருமணத்திற்காக ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். நீங்களும் ஜெபித்தீர்கள். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு 12.11.2010 அன்று மகனின் திருமணத்தை நடத்தித் தந்தார். தேவனுக்கே மகிமை.

***அன்பானவர்களே!***

*நீங்களும் உங்கள்*
*ஜெபவிண்ணப்பங்கள்*
*எதுவானாலும் தயங்காமல்*
*அவ்வப்போது எங்களுக்கு*
*எழுதி அனுப்புங்கள்.*
*நாங்கள் ஜெபிக்கிறோம்.*
*கர்த்தர் அற்புதங்களை*
*உங்கள் வாழ்வில் செய்வார்.*

## நாகர்கோவில் - TVGM அறிமுகப்பணி அலுவலகத்திலிருந்து வந்த சாட்சிகள்!

**சகோதரி அனு ஷைனி, சேனம்விளை.**

நான் படிப்பதில் மிகவும் பின்தங்கியிருந்தேன். B.Ed. Exam எழுதும் போது TVGM அறிமுகப் பணியாளர்கள் வந்து எனக்காக ஜெபித்தார்கள். கர்த்தர் எனக்கு 70% மதிப்பெண்கள் பெற உதவி செய்தார். தேவனுக்கே மகிமை.

**சகோதரி ஜூலியட் , நாகர்கோவில்.**

எனக்கு அதிக நாட்களாக வயிற்றில் அல்சர் பிரச்சனையினால் வயிற்றில் வேதனை காணப்பட்டு வந்தது. நான் சென்னை சென்றிருந்தபோது திடீரென ஏற்பட்ட வயிற்று வலியினால் மிகவும் கஷ்டப்பட்டேன். நான் எப்பொழுதும் உபயோகிக்கும் மருந்துகளையும் எடுத்து பார்த்தேன். வலி குறையவே இல்லை. உடனே தொலைபேசி மூலம் நாகர்கோவில் TVGM அறிமுகப்பணி அலுவலகத்தோடு தொடர்பு கொண்டு சகோதரியிடம் ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு எனக்கு சுகம் தந்தார். பத்திரிக்கையிலும் சாட்சி எழுதுவதாக பொருத்தனை செய்தேன். எனவே தேவனுடைய நாம மகிமைக்காக இந்த சாட்சியை எழுதுகிறேன்.

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபியுங்கள்.**

**"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது". யாக்.** 5:16

# தினசரி ஜெபக்குறிப்புகள்

**திங்கள்:** 2010ம் ஆண்டில் உத்தேசமாக கட்டி முடித்த 12 ஜெப வீடுகளுக்காகவும், 12 முறை 100–கிராம ஊழியம் நடத்தி பின் தொடர் பணி ஊழியம் செய்ததற் காகவும், மற்றும் முடியாதவர்களுக்கு செய்த உதவிகளுக்காகவும் தேவாதி தேவனைத் துதியுங்கள்.

எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பது போல ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல; எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது. ( 2கொரி.3:5 ) ஆதலால் நம்முடைய தேவாதி தேவனையேத் துதியுங்கள்.

**செவ்வாய்:** 2011ல் கிராமங்களில் வாழும் முஸ்லீம் மக்களுக்கு ஏற்ற கைப்பிரதி வழங்கப்பட்டு, பின்தொடர் பணி நடைபெறவும், நல்ல தரிசனம் பெற்றவர்களின் தொடர்புகள் கிடைக் கும்படியாகவும் ஜெபியுங்கள்.

**புதன் :** 2011ல் "இயேசுவுக்கு சாட்சிகள்" என்ற தலைப்பில் T.V. நிகழ்ச்சிகள் வெளிவரும்படி ஜெபியுங்கள். 100–கிராம ஊழியர்கள் ஆதரவாளர்கள், பயன் பெற்றோர் மனந்திரும்பி, பாவ மன்னிப்பு பெற்ற இரட்சிப்பின் சாட்சிகள் வெளிவர ஜெபியுங்கள்.

**வியாழன் :** ஆலயமில்லாத கிராமங் களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு எங்களால் இயன்ற உதவியைச் செய்யும் படி TVGM பொருளாதார வாசலை கர்த்தர் திறக்கும்படி ஜெபியுங்கள்.

**வெள்ளி :** தொழுநோயாளர்க ளுக்கும், எய்ட்ஸ் வியாதியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், கண் பார்வையற்றோருக்கும், விதவைக ளுக்கும், தையற்பள்ளியில் படிக்கும் மாணவிகளுக்கும்,ஊழியர்க ளுடைய பிள்ளைகளுக்கும், சுவிசேஷப் பணிக் கும், TASOL க்கும் ஏற்ற உதவியை கர்த்தர் தரும்படி ஜெபியுங்கள்.

**சனி :** புதுக்கோட்டை மாவட்டம் இயேசுவுக்கே என்ற தரிசனமானது மாறிப் போகாதபடிக்கு 2011ம் ஆண்டில் 4 யூனியன்களில் 100–கிராம ஊழியம் நடைபெறவும், ஆலய மில்லாத கிராமங்களில் ஜெபவீடு கட்டப்படவும், நிலமில்லாத ஊழியர்கள் ஜெபவீடு கட்ட நிலம் வாங்கவும் ஜெபியுங்கள்.

**ஞாயிறு :** TVGM ஊழியத்தை நேசித்து, நேரடியாக பார்வையிட்டு ஆசீர்வதிப்பவர்களுக்காகவும், தபால் மூலமாக தொடர்பு கொண்டு ஜெபத்தினால் தாங்குபவர்களுக் காகவும் தேவனைத் துதியுங்கள்.

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில்
தேவன் பிரியமாயிருக்கிறார். 2 கொரி.9:7

**TVGM** <u>தலைமை அலுவலக முகவரி</u>

100-கிராம ஊழியம், ஜெபவீடு, சிறுவர் இல்லம், ( காணிக்கைகள் )
பத்திரிக்கை சந்தா, ஜெபவிண்ணப்பம் & சகல தொடர்புகளுக்கும்:-


**BRO.STEPHEN CHRISTOPHER, C.E.O.**

**TAMIL VILLAGE GOSPEL MISSION**

**"100 - VILLAGE"**
**SOMARASAMPETTAI, ( HOSPITAL STOP )**
**TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.**

**Founder : Bro .P.T. Christopher CELL : 94435 44628**

**STD Ph : 0- 431 - 2607241**
**Email : 100village@tvgm.org**
**Bro.Stephen CELL : 94871 92763**


***மாதாந்திரப் பத்திரிக்கை***
**'100 கிராம ஊழியம்'** தமிழ் / ஆங்கிலம்
ஆண்டு சந்தா – ரூ. 25 /– இந்தியா.

***Website :***
**www.tvgm.org**
தினசரி வாக்குத்தத்தம்,
**'100 கிராம ஊழியம்'** அறிக்கை,
மாதாந்திர வாக்குத்தத்த செய்தி
மற்றும் முக்கிய நிகழ்ச்சிகள்
வெளியிடப்பட்டு வருகிறது.

டிராப்ட், செக், M.T. அனுப்பும்போது உங்கள் முழு முகவரி மற்றும்
தொலைபேசி எண், காணிக்கையின் நோக்கம் யாவையும்
TVGM தலைமை அலுவலக முகவரிக்கு தபால் அல்லது எங்கள்
Email: 100village@tvgm.org மூலம் தெரியப்படுத்தி உதவுங்கள்.

**கர்த்தரால் ஏவப்படுபவர்கள் TVGM ஊழியங்களுக்கு**
**டிராப்ட் , செக், போஸ்டல் ஆர்டர் அனுப்ப வேண்டிய முறை**

**TAMIL VILLAGE GOSPEL MISSION (100-** கிராம ஊழியம், ஜெபவீடு)
**T.V.G.M. SOCIAL SERVICE** ( சிறுவர் இல்லம் ) 80G வரிவிலக்கு உண்டு
**T.V.G.M. PUBLICATION** ( பத்திரிக்கை சந்தா, அச்சகம் அமைக்க)

**( அல்லது ) சகல ஊழியங்களுக்கும்**
**MR. STEPHEN CHRISTOPHER,**
**SB A/c No:12491010 18538 CANARA BANK, Puthur Branch, TRICHY.**
**இந்த கணக்கும் TVGM ஸ்தாபனத்திற்கே அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.**


Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011
HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி
POSTAL REGISTRATION NUMBER :TRY / 013 / 2009 - 2011
Posting Date 25th at H.P.O. Trichy.

## TVGM - சிறுவர் இல்லம்

சோமரசம் பேட்டை 50 + குண்டல் 20 = 70 பிள்ளைகள்




2010 நவம்பர் மாதத்தில் பிறந்தநாள் மற்றும் நிகழ்ச்சி நாட்களில் TVGM சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு சிறப்பு உணவளித்த சகோதரர்கள் ரமேஷ் ஷீலா, சாமியப்பன், பால்ராஜ், சகோதரிகள் பெல்லா ராபர்ட், மைதிலி, வசந்தா சோமன், ( ஷோபா – பிஸ்கட்) ஆகியோருக்கு நன்றி.

## TVGM சிறுவர் இல்லக் கட்டிடப்பணி

திருச்சி – சோமரசம்பேட்டையில் கட்டப்பட்டு வரும் **ஏலீம் சிறுவர் இல்லம்** மூன்றிலொரு பங்கு முடிவடைந்துள்ளது. **தேவனைத் துதியுங்கள்.**
**மீதி இரண்டு பாகம் 2011ல் முடிவடைய ஜெபியுங்கள்!**

To

**Return Requested:**

TVGM , Hundred Village,
Somarasampettai, Trichy - 620 102. India.